நாளை காலை வாக்கு எண்ணிக்கை தொடக்கம்:

டெல்லி ஆட்சியைப் பிடிக்கப்போவது பா.ஜ.க.வா, ஆம் ஆத்மி கட்சியா!

நண்பகலுக்குள் முடிவு தெரிந்து விடும்!!

புதுடெல்லி, பிப்.7– டெல்லியில் நாளை காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. ஆட்சியை பிடிக்கப் போவது பா.ஜ.க.வா அல்லது ஆம்ஆத்மியா என்பது நண்பகலுக்குள் தெரிந்து விடும்.

டெல்லியில் 70 சட்டசபை தொகுதிகள் உள்ளன. இங்கு முதல்முறையாக 1993–ல் தேர்தல் நடைபெற்றது. பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்தது. 1998, 2003, 2008 ஆகிய 3 தேர்தல்களிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றது. 2013–ல் நடைபெற்ற தேர்தலில் தொங்கு சட்டசபை அமைந்தது. ஆம்ஆத்மி கட்சியும் காங்கிரசும் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைத்தன. ஆனால் இந்த கூட்டணி ஆட்சி அப்ப ஆயுளில் முடிந்து விட்டது. 2015–ல் நடைபெற்ற தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி 67 இடங்களிலும், பா.ஜ.க. 3 இடங்களிலும் வெற்றி பெற்றன. 2020–ல் நடைபெற்ற தேர்தலில் ஆம்ஆத்மி 62 தொகுதிகளிலும், பா.ஜ.க. 8 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

டெல்லியில் இதுவரை மதன்லால் குரானா, சாஹிப் சிங் வர்மா, கஷ்மாகவராஜ், ஷீலா தீட்சித், அரவிந்த் கேஜ்ரிவால், அதிஷி என 6 முதல்வர்கள் பதவி வகித்துள்ளனர். இந்த 6 பேரில் கஷ்மாகவராஜ், ஷீலா தீட்சித், அதிஷி ஆகிய மூவரும் பெண்கள் ஆவர். முதல்வர் பதவியில் பாலின சமத்துவத்தை நிலைநாட்டியுள்ள டெல்லி, இந்நிலையுக்கே முன்னுதாரணமாக விளங்குகிறது. அதுமட்டுமல்லாமல் 3 பெண் முதல்வர்களும் பா.ஜ.க., காங்கிரஸ், ஆம் ஆத்மி என வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்க அம்சமாகும். 2020–ஆம் ஆண்டு தேர்தலைப் போலவே 2025–ஆம் ஆண்டு தேர்தலிலும் மேற்கண்ட 3 கட்சிகளுக்கு இடையே மும்முனை போட்டி ஏற்பட்டது. கடந்த ஒரு மாதகாலமாக அந்த கட்சிகள் தீவிர பிரசாரம் மேற்கொண்டன.

இதனைத் தொடர்ந்து நேற்று முன் தினம் வாக்குப் பதிவு நடத்தது. மொத்தம் 60.42 சதவீத வாக்குகள் பதிவானவை. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன. நாளை காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு அதன்பிறகு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படஉள்ளன. நண்பகல் 12 மணிக்குள் வெற்றி முன்னணி நிலவரம் ஏறத்தாழ உறுதி செய்யப்படும் என எதிபார்க்கப்படுகிறது. வாக்குப்பதிவை முன்னிட்டு கட்டுப்பாட்டு மையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 36 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். ஏறத்தாழ அனைத்து கருத்துக்கணிப்பு கணம் பாரதிய ஜனதா கமார் 50 தொகுதிகளில் வெற்றி பெறும் நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளன. கருத்துக்கணிப்புகளின்படி டெல்லியில் 27 ஆண்டுகளுக்குப் பிறகு பா.ஜ.க மீண்டும் ஆட்சியை பிடிக்குமா? அல்லது கருத்துக்கணிப்புகளை பொய்யாக்கி ஆம் ஆத்மியே மீண்டும் வெற்றியை குசிக்குமா? என்பது நாளை நண்பகல்.அவரில் தெரிந்துவிடும்.

இந்தியாவில் கருத்துக்கணிப்புகள் பலிப்பதும் உண்டு, பலிக்காமல் போவதும் உண்டு. ஜார்க்கண்டில், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என பல கருத்துக்கணிப்புகள் தெரிவித்தன. இந்த கணிப்புகளை பொய்யாக்கி விட்டு, அரியானாவில் பா.ஜ.க. தொடர்ந்து 3–ஆவது முறையாக வாகை சூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பின்னணியில் நாளை டெல்லியில் தாமரை மலருமா அல்லது துடைப்பம் உயர்ந்தோங்குமா என்ற கேள்வி அரசியல் அரங்கை உலுக்கி வருகிறது.

முதல்வர் ஸ்டாலின் பங்கேற்ற நெல்லை விழாவில் விவசாயிகளுக்கு வழங்க வைக்கப்பட்டுள்ள பவர் டீலர்களை படத்தில் காணலாம்.

நெல்லையில் நடந்த அரசு விழாவில் பங்கேற்ற முதல்வர் ஸ்டாலினுக்கு அமைச்சர்கள் கே.என்.நேரு வெ ஏ்ளி செங்கோலை வழங்கினார். அருகில் சபாநாயகர் அப்பாவு, அமைச்சர் துரைமுருகன், சாத்தூர் ராமச்சந்திரன், பெரியகருப்பன் மற்றும் பலர் உள்ளனர்.

திருமங்கலம் அருகே

தென்னங்கிடுகு ஏற்றிவந்த லாரி தீப்பிடித்தது!

மின் வயரில் உரசியதால் சம்பவம்!!

திருமங்கலம், பிப்.07: மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே சிவரக்கோட்டை நாள்குவழிச்சாலையில் தென்னங்கிடுகு ஏற்றி வந்த லாரி மேலே சென்ற மின் கம்பத்தில் உரசியதால் தீ மலமலவென எரிந்தது தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து தீயை அணைத்ததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.

கன்னியாகுமாரி மாவட்டம் நெற்கு தாமரைக்குளம் பால்பண்ணை தெரு பகுதியைச் சேர்ந்தவர் கோபால் மகன் ஹரிபிரபீர்(27) இவர் லாரியில் தென்னங்கீற்று கிடுகுகளை ஏற்றிக் கொண்டு சென்னை சென்று கொண்டிருந்தார். அப்போது திருமங்கலம் அருகே சிவரக்கோட்டை நாள்குவழிச்சாலை இந்தியன் பெட்ரோல் பங்க் அருகே சென்று கொண்டிருந்தபோது லாரியில் இருந்த தென்னங்கீற்று கிடுகுகள் மேலே சென்ற மின் வயரில் உரசியதால் திடீரென தீ பற்றி எரிந்தது லாரியில் தீப்பற்றி எரிந்ததைக் கண்ட லாரி டிரைவர் ஹரி பிரபீர் லாரியை சாலையோர பள்ளத்தில் இறக்கினார் உடனடியாக லாரியை விட்டு இறங்கி லார் ஆளாள் தீ மல மல வெனப்பரவி எரியதொடங்கியது அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் தீயணைப்புத்துறை யினருக்கு தகவல் கொடுத்தனர்

தீயணைப்புத்துறையினர் விரைந்து வந்து லாரியில் பற்றி எரிந்த தீயினை அணைத்து தீயினை கட்டுக்குள் கொண்டு வந்தனர். மேலும் நடுரோட்டில் கொட்டி எறிந்து கொண்டிருந்த தென்னங்கீற்று கிடுகுகளை தீயினை அணைத்து பொக்லைன் இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர் செய்தனர் இதனால் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப் பட்டது.

இன்றைய நிலவரம்

தங்கம்	22 CT	1 கிராம்	ரூ.7,930
		8 கிராம்	ரூ.63,440
	24 CT	1 கிராம்	ரூ.8,650
வெள்ளி		1 கிராம்	ரூ.107.00

முரசு: 66 ஒலி: 188
8 பக்கங்கள் விலை: 500 காசுகள்
MALAI MURASU
Regd. No. TN/TVL-071/2025-2026
RNI Regn. No: 1487/59

நெல்லை மாலை முரசு

www.malaimurasu.com
நெல்லை
07–02–2025 (தை 25)
வெள்ளிக்கிழமை

திருநெல்வேலி அல்வாவை விட

மத்திய அரசின் அல்வா 'பேமஸ்';

தமிழகத்துக்கு நீதியும் இல்லை; நிதியும் தருவதில்லை!

நெல்லையில் நடைபெற்ற அரசு விழாவில் முடிவுற்ற பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து புதியதிட்டபணிகளுக்குஅடிக்கல்நாட்டினார்.அருகில்சட்டபேரவைத்தலைவர்அப்பாவுமற்றும்அமைச்சர்கள், கலெக்டர் கார்த்திகேயன் உள்பட பலர் உள்ளனர்.

நெல்லை அரசு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பரபரப்பு பேச்சு!!

நெல்லை, பிப்.7– தமிழகத்துக்கு நீதியும் இல்லை நிதியும் தருவது இல்லை. திருநெல்வேலி அல்வாவை விட மத்திய அரசு தரும் அல்வா மிகவும் பேமஸ் ஆக உள்ளது என நெல்லை அரசு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மத்திய அரசை கடுமையாக தாக்கி பரபரப்பாக பேசினார்.

நெல்லை பாளையங்கோட்டையில் அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்துள் இன்று காலை அரசு விழா நடைபெற்றது. இதில், 75 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார். மேலும், பல இடங்களுக்கு அடிக்கல் நாட்டியும், தொடங்கியும் வைத்தார்.

பின்னர், விழாவில் அவர் பேசியதாவது:–

2023-ஆம் ஆண்டு டிசம்பரில் எப்படிப்பட்ட கன மழை பெய்தது என்று உங்களுக்கு தெரியும். அதனால், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்கள் எப்படி வெல்லம் கடுமையாக பாதிக்கப்பட்டது என்றும் உங்களுக்கு நன்றாக தெரியும். அந்த பாதிப்புகளிலிருந்து மீள, ஒன்றிய அரசிடம் நாங்கள் நிதி கேட்டோம். இரண்டு ஒன்றிய அமைச்சர்கள் வந்தார்கள். ஆனால், அவர்கள் உடனடியாக இடைக்கால நிதி உதவியைக் கூட செய்யவில்லை. நம்முடைய நமியார் நாகேந்திரன் அவர்கள் கொர்த்துக் கொள்ளக் கூடாது. அவருக்கும் உண்மை தெரியும். ஆனால், அவர் பேசமாட்டார். நீங்கள் பேசுங்கள் என்றுதான் எனக்கு அனுமதி கொடுப்பார்.

இருந்தாலும், மாநில அரசின் நிதியை வைத்து

6–ம் பக்கம் பார்க்க

மணப்பாறையில் தனியார் பள்ளியில் 4–ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை:

பள்ளி நிர்வாகிகள், தலைமையாசிரியை உள்பட 5 பேர் கைது!

பள்ளியை சூறையாடிய பொதுமக்கள் சாலை மறியல்!!

மணப்பாறை பிப் 7 திருச்சி மாவட்டம், மணப்பாறையில் உள்ள மணப்பாறைபட்டி சாலையில் தனியார் பெட்ரிக், மற்றும் தனியார் சிபி எஸ்இ பள்ளிஎன்று செயல்பட்டு வருகின்றது. இந்த பள்ளியில் பயின்ற 4 ம் வகுப்புமாணவிபள்ளிக்கு வழக்கம் போல் சென்ற நிலையில்பதிய தேர்தலில் வகுப்பறையில் இருந்த மாணவியிடம் பள்ளியின் தாளாளர்சுதாவின்கணவர் வந்தகுமார்(54) என்பவர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகின்றது.

இதையடுத்து மாலையில் பள்ளி முடிந்து விட்டு வீட்டிற்கு சென்ற மாணவி நடந்த சம்பவத்தை பெற்றோரிடம் கூறி உள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் பள்ளிக்கு சென்று வந்தகுமாரை தர்ம அடி கொடுத்தனர்.

பள்ளி நிர்வாகிகள் உள்பட 5 பேர் கைது

மேலும் சம்பவம் பற்றி தகவல் அறிந்த மணப்பாறை போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தியதுடன் வந்தக் குமாரை மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். இந்நிலையில் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட நபர் மற்றும் பள்ளி நிர்வாகிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி மாணவி தந்தை உறவினர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பள்ளி முன்பு இரண்டு போராட்டத்தில் ஈடுபட்ட தோடு ஆத்திரத்தில் பள்ளிக்குள் புகுந்து அலுவலக அறையின் கண்ணாடியை அடித்து நொருக்கினர். மேலும் அங்கிருந்த காரின் கண்ணாடியையும் உடைத்து நொறுக்கிய தோடு காரை கவிழ்த்தனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டே போலீசார் வந்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

இருப்பினும் உடனடியாக வழக்கு பதிவு செய்து சம்மந்தப்பட்ட பள்ளியின் தாளாளர், நிர்வாகிகள், முதல்வர் உள்ளிட்ட அனைத்து நபர்களையும் கைது செய்து நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி நொச்சிமேடு என்ற இடத்தில் திருச்சி – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதையடுத்து புதுஜி வருண்குமார், திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், செல்வநாரெத்தினம் தலைமையிலான போலீசார் மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி 4 பேர் கைது செய்யப்பட்டுள்ள தாக கூறியதை அடுத்து நள்ளிரவில் மக்கள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த சம்பவத்தால் மணப்பாறையில் நேற்று நள்ளிரவு வரை பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவம் குறித்து திருச்சி எஸ்.பி. செல்வநா

6–ம் பக்கம் பார்க்க

நெல்லையில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளைவழங்கினார்.அருகில்சட்டப்பேரவைத்தலைவர்அப்பாவு,அமைச்சர்கள்,கலெக்டர்கார்த்திகேயன் உள்பட பலர் உள்ளனர்.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கோரி

டெல்லியில் தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டம்!

புதுடெல்லி,பிப்.7 இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதை தடுத்து நிறுத்தக் கோரி மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருவதை கண்டித்து டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி எம்.பி. தலைமையில் இன்று போராட்டம் நடைபெற்றது. தி.மு.க எம்.பிக்கள் மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பிக்கள் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு மீனவர்கள் இலங்கையால் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறது. மீனவர்கள் தங்கள் படகுகள் இல்லாமல் என்ன செய்ய முடியும்? இது தமிழ்நாட்டில், மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முதல்வர் மு.க. ஸ்டாலின் அமைச்சருக்கும் பிரதமருக்கும் கடிதம் எழுதியுள்ளார். அவர் இங்கு வரும் ஒவ்வொரு முறையும், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண பிரதமரிடம் வலியுறுத்துகிறார்.

இலங்கை கடற்படையினர் நமது மீனவர்களின் கிட்டத்தட்ட 210 படகுகளை எடுத்துச் சென்றுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகிறது. மீனவர்கள் தங்கள் படகுகள் இல்லாமல் என்ன செய்ய முடியும்? இது தமிழ்நாட்டில், குறிப்பாக மீனவர்களுக்கு ஒருபெரியபிரச்சினையாக மாறி வருகிறது. அவர்களின் முழு வாழ்வாதாரம், குடும்பம் மற்றும் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.மீனவர் குழுக்களிடையே பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினையை நிரந்தரத் தீர்வு காண வேண்டும்" என்று தெரிவித்தார்.

முன்னதாக, மீனவர் பிரச்சினை பற்றி விவாதம் நடத்த வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி நோட்டீஸ் அளித்தார்.

பனகுடி அருகே

கல்வெட்டான்குழியில் கழுத்து அறுபட்ட நிலையில் வாலிபர் உடல் மீட்பு!

கொலை செய்யப்பட்டாரா? போலீசார் விசாரணை!!

நெல்லை, பிப்.7 பனகுடி அருகே கல்வெட்டான்குழியில் கழுத்து அறுபட்ட நிலையில் வாலிபர் உடல் மீட்கப்பட்டது. அவர் யார்? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நெல்லை மாவட்டம் பனகுடி அருகே உள்ள பஸாக்கொட்டை பாறை ஊரை அடுத்த காட்டுப்பகுதியில் கல்வட்டான்குழி உள்ளது. இதையடுத்து நேற்று அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் கல்வட்டான்குழி தண்ணீரில் வாலிபர் ஒருவரின் உடல் மிதப்பதாக பனகுடி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் கல்வெட்டான் குழியில் மிதத்தவாலிபரின்உடலை மீட்டு பாரவைபிட்டு விசாரணை நடத்தினர். இதில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க அந்த வாலிபர் பேண்ட், சட்டைகளை விடுவிக்க அவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். சிறை பிடிக்கப்பட்ட படகுகளை விடுவிக்க வேண்டும். மத்திய அரசு இலங்கை அரசுடன் பேசி இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்" என்று தெரிவித்தார்.

முன்னதாக, மீனவர் பிரச்சினை பற்றி விவாதம் நடத்த வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி நோட்டீஸ் அளித்தார்.

ஜனாதிபதி நிறுத்தி வைத்தால் கிடப்பிலேயே இருக்குமா?

மசோதா விவகாரத்தில் ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது!

தமிழக கவர்னருக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்!!

புதுடெல்லி, பிப்.7– மசோதா விவகாரத்தில் ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் டித்து ரைத்துள்ளது. ஜனாதிபதி மசோதா மீது முடிவெடுக்காமல் நிறுத்தி வைத்தல் அது அப்படியே கிடப்பில் இருக்குமா என்றும் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

தமிழக அரசுக்கும், கவர்னர் ஆர்.என்.ரவிக்கும் இடையே தொடர்ந்து மோதல் நடந்து வருகிறது. குறிப்பாக தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு உடனடியாக ஒப்புதல் அளிக்காமல் காலதாமதம் செய்து வருகிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமனம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து துணைவேந்தர் நியமனம் உள்ளிட்ட பல்வேறு மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் வழங்க உத்தரவிடக்கோரி தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் பிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு உள்ளன.

இந்த வழக்குகளை நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு நடந்த விசாரணையின்போது, கவர்னருக்கு உச்சநீதிமன்றம் சில அறிவுறுத்தல்களை கூறியிருந்தது. இதற்கிடையே நேற்று மீண்டும் விசாரணை நடைபெற்றது. அப்போது தமிழக பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது. இதுதொடர்பான மசோதாக் களுக்கு 3 ஆண்டுகளாகப்போ அளித்த காரணு ஏன்? என்று தமிழக கவர்னருக்கு, உச்சநீதிமன்றம் சரமாரியாக கேள்வி எழுப்பியது. மேலும் விசாரணை இன்றும் (வெள்ளிக்கிழமை) தொடரும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது. அதன்படி, இந்த வழக்கு விசாரணை நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கவர்னர் எதுவும் விளக்கமளிக்காமல் மசோதாவை திரும்ப அனுப்பினால், அவர் மனதில் என்ன இருக்கிறது என்பது எப்படி தெரியும்?. சம்பந்தப்பட்ட மசோதாவில் என்ன மாற்றம் செய்ய வேண்டும் என்பதை அவர் தெரிவிக்கவில்லை என்றால் அரசுக்கு எப்படி தெரியும்?. சம்பந்தப்பட்ட

6–ம் பக்கம் பார்க்க

ஆட்டத்தை 'அனுபவித்து' ஆட வேண்டும்! -சாய்பல்லவி.

இயக்குநர் சந்து மொண்டேட்டி இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'தண்டேல்' படத்தில் நாக சைதன்யா, சாய் பல்லவி, கருணாகரன், 'ஆடுகளம்' நரேன், பப்லு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். உண்மை சம்பவங்களை தழுவி உணர்வுபூர்வமான காதல் கதையாக உருவாகியுள்ள இப்படம் குறித்து நாயகி சாய்பல்லவி கூறுகையில்,''இந்த கதையின் மூல வடிவத்தை 'கோவிட்' காலகட்டத்தில் இயக்குநர் சந்து மொண்டேட்டி என்னிடம் கொடுத்து படிக்கச் சொன்னார். அதில் என்ன சம்பவம் நடந்தது? என்ற விவரம் இடம் பிடித்திருந்தது. பகிர்ந்தளிக்கப்படுகிறக்கும் தங்களுடைய சிறைபிடிப்பதற்கு மீனவர்களை அவர்களுடைய மனைவிமார்கள் எப்படி எந்தவித தொடர்பும் இல்லாமல் மீட்டு வந்தார்கள் என்ற விஷயம் இருந்தது. அதை படித்துவுடன் இதனை எப்போது செய்தாலும்.. இந்த உணர்வு ரசிக்கதுகுக்கு சரியான விதத்தில் சென்றடையும் என கணித்தேன்.

ஒவ்வொரு பட்தில்லும் எனது நடிப்பு முற்றுமை படங்களை விட மேம்பட்டு வருகிறதே என கேட்கிறார்கள், அதற்கு காரணம்.. அந்தக் கதை.. அந்த கதாபாத்திரம்.. அதன் இயக்குநர்.. இந்த மூன்றும் தான் முக்கிய காரணம்.

அதே மாதிரி நடனத்தை பொறுத்தவரை, நான் நன்றாக சரித்து ஆடுவேன். விஜய் சாரின் நடனத்தில் ஒரு தனி கிரேஸ் இருக்கும். அதை பார்க்கும் போது நாமும் ஆட வேண்டும் என்று தோன்றும். விஜய் சார் சிம்ரன் மேம் நடனமாடும் போது அதை பார்த்து உற்சாகம் அடைந்திருக்கிறேன். நடன அசைவுகளை துல்லியமாக ஆட வேண்டும் என்பதை விட அதை அனுபவித்து ஆட வேண்டும் என எண்ணுவேன். இந்தப் படத்தில் பல நூறு நடன கலைஞர்களுடன் இணைந்து நடனமாடும் போது அது வலலனதுகாத் தான் இருந்தது. குறிப்பாக இந்த பாடலுக்கு நடனமாடும் போது என் சக கலைஞர்கள் நாக சைதன்யா உடன் இணைந்து நிறைய ஒத்திகை பார்த்தோம். அந்தப் பாடலில் எண்ணை விட நாக சைதன்யா நன்றாகவே நடனமாடி இருக்கிறார். திரையுலகில் தொடர் வெற்றியின் ரகசியம் குறித்து செல்வதென்றால் எண்ணத்தை தேடி வரும் நல்ல கதைகள் எந்த மொழியில் இருந்தாலும் அதில் பங்களிப்பு செய்வேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விசயத்தை கற்றுக் கொண்டே தான் இருக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார் .

'கைதி–2' படத்தில் கமல்ஹாசன்!

தமிழில் கடந்த 2019–ல் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், கார்த்தி நடிப்பில் வெளியான 'கைதி' திரைப்படம் ரசிக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.ஆக்சன் திரில்லராக உருவான இப்படத்துக்கு சாம் சி.எஸ். இசையமைத்து இருந்தார். கதாநாயகி, பாடல் என எதுவுமே இல்லாமல், நடிகர் கார்த்தியை புதிய ஒரு பரிணாமத்தில் காட்டிய இப்படத்தின் 2–ம்பாகம் குறித்து தகவல்கள் ரசிக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது. மேலும் கமல்– கூட்டணியில் வெளியான விக்ரம் படத்திலும் கைதி படத்தின் எலிபெ–வாக சில காட்சிகள் இடம் பெற்று இருந்தன. இந்நிலையில், இயக்குனர் லோகேஷ் கனகராஜ் தற்போது ரஜினியின் 'கூலி' படத்தை இயக்கி வருகிறார்.

இறுதிக்கட்டத்தில் உள்ள இப்படத்தின் படப்பிடிப்பு பணிகளை முடித்த பின்பு, கைதி 2 படத்தின் படப்பிடிப்பை தொடங்க உள்ளார். இப்படத்தில்,நடிகர் கமல்ஹாரன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து கமல்ஹாசனிடம் லோகேஷ் கனகராஜ் கேட்டதாகவும், அதற்கு கமல்,தேதியை முடிவு செய்து சொல்லுங்கள் வருகிறேன் என கூறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.இதன் காரணமாக இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகி உள்ளது.

ஒரு இரவில் நடக்கும் கிரைம் திரில்லர், 'அவன் இவள்'!

கள்வன்', 'எனக்கொரு வெங்ப் வேணுமடா' ஆகிய குறும்படங்களை தொடர்ந்து ஜியா எழுதி, இசையமைத்து இயக்கியுள்ள 'அவன் இவள்' குறும்படம் வரும் பிப்ரவரி 8ம் தேதி யூடியூப் சேனலில் வெளியாகிறது. மரியம் தியேட்டர்ஸ் தயாரித்துள்ள இப்படத்தில் செபாஸ்டின் அந்தோணி, மீரா ராஜ், இசெல்லா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.இப்படம் குறித்து அதன் இயக்குனர் ஜியா கூறுகையில்,''ஒரு இரவில் நடக்கும் கிரைம் திரில்லராக இந்த குறும்படம் உருவாகியுள்ளது. இதற்கு முன் நான் இயக்கிய 'கள்வன்', 'எனக்கொரு வெங்ப் வேணுமடா' ஆகிய இரு குறும்படங்களிலும் வசனங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இதில் வசனம் குறைவாகவும் விஜுவல் கதை சொல்லல் அதிகமாகவும் இருக்கும். எனது முதல் இரண்டு குறும்படங்களைப் போல், இதுவும் முழுக்க கமர்ஷியல் அம்சத்தை கொண்ட படமாகும்'' என்றார். இப்படத்தின் ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பை அபிஷேக் கையாண்டுள்ளார். இசை வடிவமைப்பு, சவுண்ட் மிக்சிங் கிலென் ரால்ஃப் செய்துள்ளார்.

சிறுத்தை சிவா இயக்கத்தில் விஜய் சேதுபதி!

சூர்யா நடிப்ில், சிறுத்தை சிவா இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளியாகி பெரும் தோல்வியை சந்தித்த கங்குவா படத்தை தொடர்ந்து,அடுத்து சிறுத்தை சிவா, மீண்டும் அஜித்துடன் கூட்டணி அமைக்க உள்ளதாக தகவல்கள் வெளியான நிலையில், அஜித், அடுத்த 1 வருடத்திற்கு கார் பந்தய போட்டிகளில் கவனம் செலுத்தப் போவதாகவும், சிறுத்தை சிவா இயக்கத்தில் எந்த படத்திலும் நடிக்க போவதில்லை என்றும்,அடுத்ததாக வெங்கட் பிரபு அல்லது விஷ்ணுவர்தன் இயக்கும் படத்தில் நடிக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதையடுத்து சிறுத்தை சிவா, விஜய் சேதுபதியிடம் அதிரடி ஆக்சன் கதை ஒன்றை சொல்ல, அதில் இம்ப்ரஸாகிப் போன விஜய்சேதுபதியும் ஓ.கே. சொல்லிவிட்டார் என்கிறார்கள்.விரைவில் இப்படம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என்கிறார்கள்.

நடிகர் கார்த்தியின் 29–வது படத்தில் வடிவேலு!

நடிகர் கார்த்தி நடிப்பில் சமீபத்தில் வெளியான 'மெய்யழகன்' ரசிக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தை தொடர்ந்து கார்த்தி,அடுத்ததாக, நலன் குமாரசாமி இயக்கத்தில், 'வா வாத்தியார்' படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் விரைவில் வெளியாக உள்ளது. இதையடுத்து தற்போது 'சர்தார் 2' படத்தில் நடித்து வருகிறார்.இந்நிலையில்,கார்த்தி நடிக்கும் அவரது 29வது படத்தில் 'வைகைப்புயல்' வடிவேலு ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இப்படத்தை, விக்ரம் பிரபு நடித்த 'டணாக்காரன்' படத்தை இயக்கியநடிகரும் இயக்குனருமான தமிழ் இயக்கவுள்ளார். மாரி செல்வராஜின் 'மாமன்னன்' படத்தில் இடம்பெற்ற கதாபாத்திரம் போன்றே மீண்டும் ஒரு அழுத்தமான கதாபாத்திரத்தில் வடிவேலு இப்படத்தில் நடிக்க உள்ளார் என்கிறார்கள். மேலும், முதன்முறையாக நடிகர் கார்த்தியுடன், வடிவேலு இணைந்துள்ளது, கார்த்தி,வடிவேலு ரசிக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்துக்கு நீதியும் இல்லை;...

1–ம் பக்கத் தொடர்ச்சி...

நிவாரண பணிகளை நாங்கள் செய்தோம். தொடர்ந்து ஒன்றிய அரசிடம் நிதி கேட்டு வலியுறுத்தினோம். கொடுக்காத அவர்களை கண்டித்தோம். அப்போதும் வர வில்லை. நாடாளுமன்றத்திலும் பேசினோம். அப்போதும் வரவில்லை. ஏன், நீதிமன்றம் சென்றோம். அதன்பிறகுதான் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரணநிதியை அறிவித்தார்கள். அதுவும் எவ்வளவு? நாம் கேட்டது, 37 ஆயிரத்து 907 கோடி ரூபாய்! வேறு வழியில்லாமல் ஒன்றிய அரசு கொடுத்தது. எவ்வளவு கொடுத்தது வெறும் 276 கோடி ரூபாய்! நாங்கள் கேட்டநிதி ஒரு விழுக்காட்டைக் கூட கொடுக்கவில்லை. இப்படிதான் ஒன்றிய அரசு நடந்து கொண்டு இருக்கிறது.

சரி போகட்டும்! இந்த பட்ஜெட்டிலாவது நாங்கள் கேட்ட நிதிகளையாவதுக் கித் தருவார்கள் என்று எதிர்பார்த்தோம். அதுவும் இல்லை. தமிழ்நாட்டிற்கு நிதியும் கிடையாது, நிதியும் கிடையாது என்று ஒதுக்கிவிட்டார்கள். மீண்டும் மீண்டும் வஞ்சிக்கிறது, ஒன்றிய பா.ஜ.க. அரசு! அவர்களை பொருத்தவரைக்கும், கூட்டணியில் இருக்கும் மாநிலங்களுக்கும், தேர்தல் வரும் மாநிலங்களுக்கும் மட்டும்தான் அறிவிப்புகளையும் நிதியையும் கொடுப்பார்கள். அதனால் தான் நாங்கள் கேட்கிறோம். என்ன கேட்கிறோம்?

இந்தியாவின் வரைபடத்தில் மட்டும், தமிழ்நாடு இருக்குதல்லபோதுமா? அரசாங்கம் வெளியேறும் நிதிநிலை அறிக்கையில் இருக்கவேண்டாமா? ஒன்றிய அரசின் திட்டங்களில் தமிழ்நாட்டின் பெயர் இருக்க வேண்டாமா? தமிழ்நாட்டிற்கு சிறப்புத் திட்டங்களை அறிவிக்க வேண்டாமா? தேர்தல் நேரத்தில் வாக்கு கேட்க மட்டும் தமிழ்நாட்டிற்கு வந்தால் போதும் என்று நினைக்கிறார்களா? இப்படி நாங்கள் கேட்கும் கேள்விகள் எதற்கும், பா.ஜ.க.விடம் இருந்து எந்த பதிலும் வராது.

திருநெல்வேலி அல்வா என்றால் உலக அளவில் புகழ்பெற்றது. ஆனால், இப்போது, மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு தரும் அல்வாதான் அதைவிட புகழ்பெற்றதாக இருக்கிறது! நம்முடைய நிரந்தரமாடல் அரசை பொறுத்த வரைக்கும் – ஒன்றிய அரசை பொருட்படுத்தாமல், நமக்கு நாமேதான் தமிழ்நாட்டை மேம்படுத்தி வருகிறோம். அதனால்தான், ஒன்றிய அரசு வெளியிடும் எல்லாபுள்ளி விவரங்களிலும் முன்னணியில் இருக்கிறோம். அதற்கு காரணம், வங்கக் எரித்த மக்களான உங்களுக்கு, நாங்கள் உண்மையாக இருக்கிறோம்.

ஒன்றிய அரசு மேல் குறை சொல்லிக்கொண்டு எந்த திட்டத்தையும் உருவாக்காமல் விட்டு விடவில்லை. நாளுக்கு நாள் புதுப் புது திட்டங்கள், வந்துக் கொண்டே இருக்கிறது.

நாங்கள் உருவாக்கிக் கொண்டே இருப்போம். நேற்றுகூட, கங்கைகொண்டான் சிப்காட்டில், 3800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டாடா பவர் சோலார் நிறுவனத்தைத் தொடங்கி வைத்தேன். அதுமட்டுமல்ல, 2574 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விக்ரம் சோலார் நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

இதில், டாடா பவர் சோலார் நிறுவனத்திற்கு, நாங்கள் ஆட்டோக்கு வந்து 4.7.2022 இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, 20.10.2022இல் அடிக்கல் நாட்டி, நேற்று, அதாவது இரண்டே ஆண்டில் திறந்து வைத்திருக்கிறோம்.

அந்த தொழிற்சாலை மூலமாக மட்டும் 4000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. அதில் முக்கியமானது என்ன என்று கேட்டால், 80 சதவிகிதம் பேர் பெண்கள். அந்த நிறுவனத்திற்கு நான் சென்ற போது, அங்கிருந்த ஒரு பெண் தொழிலாளர் என்னிடம் சொன்னது, அப்பா, எங்கள் ஊரில் எவ்வளவு பெரிய தொழிற்சாலையைக் கட்டி எங்களுக்கு வேலை கொடுத்திருக்கிறீர்கள். நன்றி என்று அந்த மகள் சொன்னபோது நான் நெகிழ்ந்து போனேன்.

அதேபோன்று, விக்ரம் சோலார் நிறுவனத்தை பொருத்த வரைக்கும், கடந்த ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு 3 ஆண்டு ஆகியும் ஒரு அடிக்கு கூட நகராமல் இருக்கிற திட்டத்தை, அதற்கு பிறகு அவர்கள் எந்த முயற்சியும் செய்ய வில்லை. அதைப்பற்றி கவலையும் படவில்லை. ஆனால், நம்முடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டின் சூழ்நிலையை விளக்கி, உறுதி கொடுத்து அந்த நிறுவனத்தை அழைத்து வந்திருக்கிறோம்! அதிலும், 2500 பேருக்கு வேலை கிடைக்கப் போகிறது. நான் இப்போதே சொல்கிறேன். அங்கும் பெரும்பாலான குறிப்பிட்ட மகளிருக்குதான் வேலைவாய்ப்பு. இப்படி செய்வதால் இந்த மாவட்டத்து ஆண்களுக்கு சிறிது பொறாமை கூட வரும்.

உண்மையை சொன்னால், ஒரு பெண் கல்வி பெற்று பொருளாதாரசுதந்திரம் அடைந்தால், அந்த குடும்பத்தின் தலைமுறையே உயர்ந்து நிற்கும். அதனால்தான் எண்ணுடைய ஆட்சியில் மகளிருக்கான திட்டங்களைப் பார்த்துப் பார்த்து நாங்கள் செய்துக்கொண்டு வருகிறோம்.

இன்றைக்கு ஒரு விவசாயிகள் பயன்கூடிய வகையில் 77கோடி ரூபாய் மதிப்பீட்டில், மொகாடை வழி பூங்காவையும் இரு சிப்காட்டில் திறந்து வைத்திருக்கிறேன். அதன்மூலம் பல ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்! என்னுடைய இந்த ஆட்சியில், நவீன தொழில்களின் மையமாக தமிழ் நாட்டை உயர்த்த வேண்டும். சென்னை, கோவை என்று மட்டுமல்லாமல், தென் தமிழ்நாட்டில் பிறம்மாண்ட தொழிற்சாலை கள் நிறைய அமைய வேண்டும். இளைச்சக்கணக்கான இளைஞர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு சிறந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கவேண்டும் இது தான்எங்களுடையஇலக்கு.

அதை முன்னுரிமையாக கொண்டு தான் திட்டங்களை தீட்டி, முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் தந்துபிரமாண்டமாக முடைய நிரமாலிட மாடல் ஆட்சி படைத்துக் கொண்டு இருக்கிறது.

படித்த இளைஞர்களுக்கு இங்கேயே நல்ல வேலை கிடைப்பதை உறுதி செய்வோம்!

இந்த தென்பாண்டிச் சீமையை, தொழில் வளர்ச்சி நிறைந்த சீமையாக மாற்றியது இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி என்று வரும் காலம் சொல்லும்! அந்த அளவுக்கு, வலுவான அடித்தளத்தை உருவாக்கி இருக்கிறோம்.

உலக அளவிலானமுதலீட்டாளர்களை இருந்தாலும், இந்தியாவின் முன்னணி தொழில் நிறுவனங்களாக இருந்தாலும், அவர்களை நான் சந்தித்தால், "எங்கள் சென்னை மாவட்டங்களில் "கலக்காடு நகராட்சி ஆணையாளர் சுமா குடிநீரில் குளோரின் அளவு குறித்து ஆய்வு செய்தார்.

கிரியா, யோகா தியான பயிற்சி:

12 வருடங்களுக்கு பிறகுதான் எனக்குள் ஓர் அமைதி, நிம்மதியை காண்கிறேன்!

நடிகர் ரஜினிகாந்த் வெளியிட்ட தகவல்!!

ஜார்கண்ட்,பிப்.7

நடிகர்ரஜினிகாந்த்,ஜார்கண்டில் உள்ள ஒய்.எஸ். எஸ். ராஜ்ஸ் ஆசிரமத்தில் கிரியா யோக தியானபயிற்சி மேற்கொண்டுள்ளார்.

இந்த அனுபவத்தை பகிர்ந்துகொண்ட ரஜினிகாந்த், கிரியா யோக தியானம்,12 வருடங்கள் ஆன பிறகு தான்தனது வாழ்வில் மாற்றத்தைஏற்படுத்தி, அக அமைதி, வலிமை, தெய்வீகக் கருணை உணர்வு ஆகிய வற்றைக் கற்றுக்கொடுத்து, ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியதாக கூறியுள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் சமீபத்தில்ஜார்கண்டிலிஉள்ள ஒய்.எஸ்.ராஜ்ஸ் ஆசிரமத்துக்கு வந்திருந்தார். அந்த ஆசிரமத்தில் தனக்கு கிடைத்த அனுபவம் பற்றி அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில் கூறியிருப்பதாவது:–

ஒய்.எஸ்.எஸ். ராஜ்ஸ் ஆசிரமத்துக்கு 3 தடவை வந்துள்ளேன்.

பரமஹம்ச யோகானந்த தாஜியின் அறையில் அமர்ந்து யோகா செய்யும் பாக்கியம் கிடைத்தது. அந்த அனுபவத்தை வார்த்தைகளால் வர்ணிக்கவே முடியாது.

14 ஆண்டுகளுக்குபிறகு இந்த ஆசிரமத்துக்கு வந்துள்ளேன்.

இவர் வருடாவருடம் இங்கு வந்து, சுமார் ஒரு வாரம் தங்குவது என்று முடிவு எடுத்துள்ளேன்.

நான் மிகவும் 'ஸைப்' ஆக இருப்பதாகவும், என்னை பார்த்தால் ஒரு 'பாசிட்டிவ் வைப்' வருகிறது என்கிறார்கள். அதன் ரகசியமே நான் கிரியா யோகா பயிற்சி செய்து வருவது தான்.

2002ம் ஆண்டு முதல் கிரியா யோகாவில் ஈடுபட்டு வருகிறேன்.

தொடக்கத்தில் எனக்கு எந்த மாற்றமும் தெரிய வில்லை. ஆனாலும்,நிறுத்தவில்லை. ஒருகட்டத்தில், அதாவது 12 வருடங்கள் ஆன பிறகு தான் மாற்றத்தை உணரமுடிந்தது. எனக்குள் ஒரு நிம்மதி, அமைதி இருந்தது. கிரியா யோகாவின் சக்தி என்பது, அதை தெரிந்து கொண்டவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

இது ஒரு பாம் ரகசியம். இது எல்லோருக்குமே பயன்படட வேண்டும்.இவ்வாறு ரஜினிகாந்த் அந்த வீடியோவில்கூறியுள்ளார்

விஷ மாத்திரை தின்ற தம்பதி!

கணவர் சாவு!!

தேனி,பிப்.7

தேனி மாவட்டம் கடமலைக்குண்டு அருகே பாலூத்தை சேர்ந்தவர் மொட்டையன் மகன் கூலித்தொழிலாளி செல்வம் (49)

இவரது மனைவி இந்திரா(39).

இவர்களுக்கு இரேஷ், குமாரசங்கீதாஎன்றஇரண்டு மக்கள் உள்ளனர்.

செல்வம் மது குடித்து வந்ததால் ஒரு வருடத் இற்கு முன்பு கிராமநிர்வாக பாதிப்புஏற்படுட்அறுவை சிகிச்சை செய்தும், தொடர்ந்து மது குடித்து வந்ததால் கணவன் மனைவி இருவருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிப். 5ஆம் தேதி அன்று செல்வத்திற்கு வலது பக்க கிட்னியில் வைத்துள்ள பைப் பில் இருந்து தண்ணீர் வடிந்துள்ளது.

இதனால் மனமுடைந்த செல்வமும்,அவரது மனைவியும் சேர்ந்துதற்கொலை செய்து கொள்ளப் போவதாகவும்,

பிள்ளைகளுக்கு எந்த வேலையும் வாங்கிக் கொடுக்க முடியவில்லை என்று சொல்லி பேசி மன அழுத்தத்தில் இருந்து வந்த தாக வும், அன்று இரவு கணவன் மனைவி இருவரும் தற்கொலை செய்வதற்காக விஷ மாத்திரை களை சாப்பிட்டு விழித்த போது அப்போது அங்கு வந்த தினேஷ்குமார் அம்மா கையில் வைத்திருந்த மாத்திரைகளை தட்டி விட்டதாகக்கூறப்படு கிறது.

அப்போது அவரது அம்மா, உனது அப்பா விஷ மாத்திரையை சாப்பிட்டு விட்டார் என்று கூறியதை அடுத்து, இருவரையும் தேனிஅரசுமருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருவரும் சிகிச்சை பெற்று வந்த நிலையில் செல்வம் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்திரா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் குறித்து கடமலைக்குண்டு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

மசோதா விவகாரத்தில்...

1–ம் பக்கத் தொடர்ச்சி...

மசோதாமீது தான் ஒப்புதல் கொடுக்க முடியாது என்பதை எப்படி கவர்னர் உணர்த்தார்?. இந்த கேள்விகளுக்கு விளக்கம் அளியுங்கள் என கவர்னர் தரப்புக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

அதற்கு கவர்னர் தரப்பில் ஆஜராக வக்கீல், துஷ்டி வேத்தர் நியமனத்தில் தமிழ்நாடு அரசு கொண்டு வந்த நடைமுறை மத்திய சட்ட விதிமுறைகளுக்கு எதிராகஉள்ளது. அவற்றுக்கு கவர்னர் எவ்வாறு ஒப்புதல் அளிப்பார்? என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், பல்கலைக்கழக மசோதா மத்திய சட்டத்துக்கு எதிராக இருந்தால் அடுத்த நடவடிக்கை என்ன? மாநில அரசு எப்படி செயல்படும் என்று நினைக்கிறீர்கள்? கவர்னர் அரசுக்கு முட்டுக்கட்டையாக உள்ளார். மசோதா விவகாரத்தில் கவர்னர் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது என கருதினர்.

கவர்னர் தரப்பு: பல்கலைக்கழக செயல்பாடு குறித்து ஆளுநர்தலைமையில் துணைவேந்தர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. அதில்கலந்துகொள்ள வேண்டும் என்று சில துணைவேந்தர்களை அரசு அணுகியது. யு.ஜி.சி விதிகளின் கீழ் கட்டுப்பட்டு உள்ள துணைவேந்தர்கள் பொறுப்பை ஆக்கிறபிக்க மாநில அரசு முயற்சித்தது. அரசியல் காரணங்களுக்காகவே துணைவேந்தர் மசோதாவை மாநில அரசு கொண்டு வந்தது.

காரசார விவாதம் தொடர்ந்தது. கவர்னர் சிலமுரணான காரணங்களுக்காக ஒப்புதல் வழங்காமல் இருப்பார் என்றால், அரசு மற்றும் கவர்னர் என இரு தரப்பும் இணைந்து முடிவெடுக்க ஜனாநிபதிக்கு அனுப்பலாம். குறிப்பாக, இதன் மீது முடிவெடுக்க ஜனாநிபதிக்கு அனுப்புங்கள் என்று மாநில அரசே கவர்னரை கேட்க வைக்கலாம். எனவே இதில் எது வும் மாநில உரிமையை பறிப்பதாக கருத முடியாது. கவர்னர் அரசியல் மைப்பு பிரிவு 200ல் விதிகள் ன் கீழ் முடிவெடுத்தே ஆகவேண்டும் என்று கூறுவது, பிரிவு 200ஐ முழுமை தரித்து கூறுவதாக ஆகும் என்று வாதத்தின் போது கட்டிக் காட்டப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், கடந்த 2023–ஆம் ஆண்டு மசோதாக்கள் ஜனாநிபதிக்கு அனுப்பப்பட்ட பின்னர், தற்போது வரை என்ன நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டுள்ளார்?. 2 ஆண்டுகளாக மசோதாக்கள் அவரிடம் உள்ளதா? மசோதா அரசுக்கும் அவருக்கும் இடையே தகவல் பரிமாற்றம் இருந்ததா?.

அட்டார்னி ஜெனரல்: இல்லை, மசோதாக்கள் அனுப்பப்பட்ட 2 மாதங்களில் தனது முடிவை தெரிவித்து விட்டார். அதில் 7 மசோதாக்கள் மீதான ஒப்புதலை நிறுத்தி வைப்பதாக தெரிவித்துள்ளார்.

நீதிபதிகள்: ஜனாநிபதி மற்றும் ஒப்புதலை நிறுத்தி வைக்கிறார்? ஜனாநிபதி மசோதா மீது முடிவெடுக்காமல்நிறுத்தி வைத்தால்,அடுத்தஎன்ன? முடிவெடுக்காத நிலையில்,அதுஅப்பாடியேபெரிப்பில் உள்ளதா?

கவர்னர் தரப்பு: ஒப்புதல் இல்லாமல் ஜனாநிபதி நியமிட உள்ளதெனிறால், கவர்னர் தரப்பு ஜனாநிபதிக்கு அனுப்பலாம். ஆனால் அதற்கு மேல் எவரி டமும் கேட்க வேண்டியது இல்லை.

நீதிபதிகள்: அப்படியெனில் அந்த மசோதா மேட்டர் பிடேயே இருக்குமா?

கவர்னர் தரப்பு: கவர்னரின் பணிகள் என்பது அரசியலமைப்பின் அடிப்படையான கூட்டாட்சி தத்துவத்தின் ஒரு அங்கம் ஆகும். மேலும் கவர்னருக்கு அனுப்பிய மசோதாக்களும் புதிய சட்டங்கள் அல்ல, மாறாக அவை சட்ட இருத்தங்கள். அதனை ஜனாநிபதி முடிவுக்காக கவர்னர் நிறுத்தி வைக்கிறார்.

நீதிபதிகள்: பல்கலைக் கழகங்களின்தரம், துணை வேந்தர்கள் தேர்வு குறித்து கவலை கொண்டு அந்த மசோதாக்களை நிறுத்தி வைத்தால், அடுத்து என்ன?

மசோதாக்கள் தொடர்பான விவகாரத்தில் தமிழக ஆளுநரின் நிலைப்பாட்டை உச்சநீதிமன்றம் சாடியுள்ள தமிழ்நாட்டுக்கு ஆப்பாலும் அதிர்வலைகளை ஏழுப்பியுள்ளது.

செம்மலை மாலைமுரசு

முரசம்

07.02.2025

நாடு கடத்தல்: அமெரிக்க - இந்திய உறவை பாதிக்குமா?

சட்டவிரோதமாக அமெரிக்கவுக்குள் நுழைந்ததாக குற்றம்சாட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட இந்தியர்களுடன், ராணுவ விமானம் ஒன்று இந்தியாவில் வந்திறங்கியது. அதில் பெரும்பாலானோர் பஞ்சாப், குஜராத் போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அமெரிக்காவின்அதிபராகடொனால்டுடிரம்ப்பதவியேற்ற பிறகு பல்வேறு நாடுகள் மீது பல அறிவிப்புகளை அவர் வெளியிட்டு வருகிறார். அதே வேளையில் தற்போது, அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியதாக குற்றம்சாட்டப்பட்டவர்கள்மீண்டும்இந்தியாவுக்கு முதல் முறையாக நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

"அமெரிக்காவில் சட்ட விரோதமாகக் குடியேறியதாக குற்றம்சாட்டப்பட்ட 104 நபர்கள் டெக்சஸில் இருந்து அமெரிக்காவின் சி–17 போர் விமானத்தில் அவர்கள் அனைவரும் பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸில் உள்ள குருராம் தாஸ்ஜி சர்வதேச விமான நிலையத்தில் வந்து தரையிறங்கினர். இவர்கள் உரிய சோதனை நடைமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகு பஞ்சாப், அரியானா,சண்டிகர்,உத்தரப்பிரதேசம்,குஜராத்உள்ளிட்ட தங்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். உரிய அரசு ஆவணங்கள் இல்லாமல் அமெரிக்காவில் குடியேறியவர்களை அவர்களின் சொந்த நாடுகளுக்கு கடத்துவதே புதிதாகப் பொறுப்பேற்ற அதிபர் டொனால்டு டிரம்பின் முக்கியக் கொள்கையாக இருக்கின்றது.

அமெரிக்காவில் சட்ட விரோதமாக நுழைந்த 18,000 இந்தியர்களை அந்நாடு அடையாளம் கண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அமெரிக்க அரசின் புள்ளி விவரங்களப்படி, ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் அமெரிக்காவில் சட்டவிரோதமாகத் தங்கியிருள்ளனர். அதில் ஏழு லட்சத்துக்கும் அதிகமானோர் இந்தியர்கள். அதில் பலர் டிரம்ப் நிர்வாகத்தின் இந்தக் கடுமையான நடவடிக்கையால் தற்போது மிகவும் பதற்றமான சூழ்நிலையில் இருக்கின்றனர். "அமெரிக்காவில் ஆவணங்களின்றி வசிக்கும் இந்தியர்கள் குறித்து இந்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் எனத் தாங்கள் நம்புவதாக" அதிபர் டொனால்டு டிரம்ப் சமீபத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு முன்பாக சட்டவிரோதமாக குடியேறியவர்களை உரிய ஆவண சோதனைகளுக்குப் பிறகு திரும்பப் பெறுவதற்கு முற்றிலும் தயாராக இருப்பதாக இந்தியா தெரிவித்திருந்தது. ராணுவ விமானத்தில் சட்டவிரோதமாகக் குடியேறியதாக குற்றம் சாட்டப்பட்டவர்களை இந்தியாவுக்கு அனுப்புவது குறித்து, அமெரிக்கா கூறுகையில், "உலகளவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றும் செயல்முறையைத் துரிதப்படுத்துவதற்கான அமெரிக்க நிர்வாகத்தின் முயற்சிகளை அமெரிக்க ராணுவம் ஆதரிக்கிறது" என்றது. அதே வேளையில், டெல்லியில் உள்ள அமெரிக்க தூதரகம், "தற்போது நாடு கடத்தப்பட்டவர்கள் அமெரிக்கர்–மெக்சிகோ எல்லை அல்லது அமெரிக்கா –கனடா எல்லை வழியாக சட்டவிரோதமாக அமெரிக்கர்களுக்குள்நுழையமுயன்றனர். அவர்களிடம் அமெரிக்காவில் தங்குவதற்கான உரிய ஆதாரங்கள் இல்லை," என்று தெரிவித்தது.

மேலும் ஒரு நீண்ட மற்றும் விரிவான சோதனை செயல்முறைக்குப்பிறகேஇவர்கள்நாடுகடத்தப்பட்டதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். சில மாநங்களுக்கு முன்பு பஞ்சாப் மாநிலம் குர்தாஸ்பூரில் உள்ள தனது வீட்டைவிட்டு வெளியேறி அமெரிக்கா சென்ற ஒருவர் தற்போது நாடு கடத்தப்பட்டு மீண்டும் இந்தியா வந்துள்ளார். இது தவிர அமெரிக்காவில் வாழும் மற்ற இந்திய குடியேறிகளும் பெரும் பதற்றத்தில் இருக்கின்றனர். "டிரம்ப் தனது அதிபர் தேர்தல் பிரசாரத்தின்போதே குடியேற்றம் குறித்து நடவடிக்கை எடுக்கப்போவதாக" அறிவித்திருந்தார். அதனால் தற்போதுஅவரதுஅரசாங்கம்எடுத்துள்ளஇந்தநடவடிக்கை அதிர்ச்சியுட்டும் ஒன்றாக இருக்காது. அதனால் இது பெரிய அளவில் இரு நாட்டு உறவுகளில் எந்தப் பாதிப்புகளையும்ஏற்படுத்தாது என்றுசமூகப்பணிதுறைபேராசிரியரான கிளாட்ஸன் சேவியர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, வரும் நாட்களில் அதிபர் டொனால்டு டிரம்பை சந்திக்க அமெரிக்கா செல்லக்கூடும் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகின்அதுகுறித்துப்பேசியபுவன், "அவர்களுக்குள் நடக்கவுள்ள பேச்சுவார்த்தைகளில் குடியேறும் பற்றிப் பெரும்பாலும் எதுவும் இருக்க வாய்ப்பில்லை. இது முன்கூட்டியே இரு நாட்டுத் தலைவர்கள் சமீபத்தில் தொலைபேசி வாயிலாகப் பேசி எடுத்த முடிவுதான்," என்றார்.

தற்போது நாடு கடத்தப்பட்டவர்களுக்கு மட்டுமேதான் மிகப்பெரிய பிரச்சினை இருக்கிறது. அவர்கள் அனைத்து அரசாங்க ஆவண சரிபார்ப்புக்கும் இணங்கிச் செயல்பட்டனர். இதற்கு அரசு எந்தவிதத்திலும் உதவ முடியாது." என்று அவர் தெரிவித்தார்

பள்ளி நிர்வாகிகள்...

1–ம் பக்கத் தொடர்ச்சி...

துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டது குறித்து மாணவர்கள் கட்டுப் படுத்தவும் பொருளாதார ஸ்திரத்தன்மையை சிறப்பாகப் பராமரிக்கவும், நிர்வாக வங்கி முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு ரெப்போ வட்டி, 6.50 சத வீதத்தில் இருந்து 6.25 சத வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதுமற்றும் அதிகாரப் பூர்வ அறிவிப்பை நிர்வாக வங்கி கவர்னர் சஞ்சய் மல்கோத்ரா வெளியிட்டுள்ளார்.

ரெப்போ விகிதம் என்பது வங்கிகளுக்கு நிர்வாக வங்கி வழங்கும் குறுகிய கால கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதமாகும். இது மாநங்களுக்கு ஒரு முறை நிர்வாக வங்கியின் நிதிக் கொள்கைக் குழு கூடி, ரெப்போ விகிதம் தொடர்பாக முடிவுகள் எடுப்பது வழக்கம். அந்த வகையில் ஆர்பிஐ நிதி கொள்கைக் குழு கூட்டதில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிர்வாக வங்கி கவர்னர் சஞ்சய் மல்கோத்ரா இன்று வெளியிட்டு இருக்கிறார்.

இதன்படி 6.50 சதவீதத்தில் இருந்து ரெப்போ விகிதம் 6.25 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் 2020–ஆம் ஆண்டு மே மாதம் ரெப்போ விகிதம் குறைக்கப்பட்டது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

ரெப்போ வீதம் குறைக்கப்பட்டுள்ளதால் பணவீக்கம் குறையக் வாய்ப்புள்ளது. வங்கிகளில் வாங்கி கடன்களுக்கான வட்டி விகிதம் அதிகரிக்கும். அதேபோல குறையும் போது, வட்டி விகிதமும் குறையும். நீண்ட காலத்திற்கு பிறகு வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை நிர்வாக வங்கி குறைத்து இருப்பது, மக்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பதாக அமைந்துள்ளது.

ரெப்போ வட்டி குறைக்கப்பட்டுள்ளதால் பணவீக்கம் குறையக் வாய்ப்புள்ளது என்று பொருளியல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் இது பொருளாதாரநெருக்கத்தன்மையை உறுதிப்படுத்த அஞ்சுவையாக இருக்கும் என் றும் அவர்கள் கூறியுள்ளனர்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டி 0.25 சதவீதம் குறைப்பு!

ரிசர்வ் வங்கி கவர்னர் அறிவிப்பு!!

மும்பை, பிப்.7

பணவீக்கத்தைக் கட்டுப் படுத்தவும் பொருளாதார ஸ்திரத்தன்மையை சிறப்பாகப்பராமரிக்கவும், நிர்வாக வங்கி முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு ரெப்போ வட்டி, 6.50 சத வீதத்தில் இருந்து 6.25 சத வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதுமற்றும் அதிகாரப் பூர்வ அறிவிப்பை நிர்வாக வங்கி கவர்னர் சஞ்சய் மல்கோத்ரா வெளியிட்டுள்ளார்.

ரெப்போ விகிதம் என்பது வங்கிகளுக்கு நிர்வாக வங்கி வழங்கும் குறுகிய கால கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதமாகும். இது மாநங்களுக்கு ஒரு முறை நிர்வாக வங்கியின் நிதிக் கொள்கைக் குழு கூடி, ரெப்போ விகிதம் தொடர்பாக முடிவுகள் எடுப்பது வழக்கம். அந்த வகையில் ஆர்பிஐ நிதி கொள்கைக் குழு கூட்டதில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிர்வாக வங்கி கவர்னர் சஞ்சய் மல் கோத்ரா இன்று வெளியிட்டு இருக்கிறார்.

இதன்படி 6.50 சதவீதத்தில் இருந்து ரெப்போ விகிதம் 6.25 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் 2020–ஆம் ஆண்டு மே மாதம் ரெப்போ விகிதம் குறைக்கப்பட்டது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

ரெப்போ வீதம் குறைக்கப்பட்டுள்ளதால் பணவீக்கம் குறையக் வாய்ப்புள்ளது என்று பொருளியல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ள னர். மேலும் இது பொருளாதாரநெருக்கத்தன்மையை உறுதிப்படுத்த அஞ்சுவையாக இருக்கும் என் றும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஜோலார்பேட்டை அருகே

ஓடும் ரெயிலில் கர்ப்பிணியை கற்பழிக்க முயன்ற காமக் கொடூரன்!

கூச்சலிட்டதால் கீழே தள்ளினான்!!

ஜோலார்பேட்டை, பிப்.7–

ஓடும் ரெயிலில் கர்ப்பிணி பெண்ணை ஒருகாம கொடூரன் ஒருவன் கற்பழிக்க முயன்றான். அந்த பெண் கத்தி கூச்சலிட்டதால் ஈவு இரக்கமில்லாமல் அவரை கீழே தள்ளினான்.

ஜோலார்பேட்டை அருகே நடந்த இச்சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:–

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த இளம் பெண் ஒருவர் திருப்பூரில் உள்ள தனியார் பனியன் கம்பெனியில் டைலராக வேலை செய்து வருகிறார். இந்நிலையில் 4 மாத கர்ப்பிணியான இவர், மருத்துவ பரிசோதனைக்காக ஆந்திர மாநிலத்திற்கு செல்வதற்காக திருப்பூரு கோயம்புத்தூரில் இருந்து ஜோலார் பேட்டை வழியாக திருப்பதி வரை செல்லும் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் ரெயிலில் பொது பெட்டியில் பயணம் செய்தார்.

ரெயில் வேலூர் மாவட்டம் குடியாத்தம் ரெயில் நிலையத்துக்கும் கே.வி. குப்பம் ரெயில் நிலையத்துக்கும் இடையே சென்று கொண்டிருந்தது. அப்போது இளம் பெண் கழிவறைக்கு சென்றார். அங்கு போதையில் காமக்கொடூரன் ஒருவன் அந்த கர்ப்பிணி பெண்ணிடம் அத்து மீறி உள்ளான். மேலும் அந்த பெண்ணை கற்பழிக்க முயன்றான். உடனே அந்தப்பெண்கூச்சல்கேட்டு சக பயணிகள் வருவதற்குள் இளம்பெண்ணை ஓடும் ரெயிலில் இருந்து கீழே தள்ளியதாக கூறப்படுகிறது.

அப்போது எதுவும் தெரியாதது போல்அது அவர்கள் வேறொரு பெட்டி யில் சென்று தப்பினர். அதன் பின்னர் தலைமறைவாகி விட்டனர். அந்த பெண்ணை கற்பழிக்க முயன்றான். மேலும் அந்த பெண்ணை கீழே தள்ளியதாக கூறப்படுகிறது.

இது குறித்து தகவலறிந்ததும்வழக்குப்பதிவுசெய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் மாம நபர்களை பிடிக்க ரெயில் நிலையத்தில் பொருத்தப் பட்டசிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை வைத்து தவிப்படை அமைத்து தீவிரமாக மாம நபர்களை தேடி வந்தனர்.

இந்நிலையில் ரெயில் நிலையை பழைய குற்றவாளிகளின்புகைப்படத்தை பதிக்கப்பட்ட பெண்ணிடம் காட்டி விசாரணை செய்த போது பழைய ரெயில் குற்றவாளியான கே.வி. குப்பம் பூஞ்சோலை நகர் பகுதியை சேர்ந்த ஹேமராஜ் (வயது 30) என்பவரின் புகைப்படத்தை பதிக்கப் பட்ட நபர் காண்பித்தார். அவரை ரெயில்வே போலீசார் அவனை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இவர் மீது ரெயில் நிலையத்தில் மேலும் பல்வேறு வழக்குகள

நெல்லை கொக்கிரகுளம் புதிய ஆற்று பாலத்துக்கு

மாஞ்சோலை தியாகிகள் நினைவு பாலம் என பெயரிட வேண்டும்!

முதலமைச்சரிடம் த.ம.மு.க.வினர் மனு!!

நெல்லை, பிப.7

நெல்லைக்கு வருகை தந்த முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் தமிழகமக்கள்முன்னேற்றகழகத்தின் மண்டல தலைவர் கண்மணிமாவீரன்அளித்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

கடந்த 1999ம் ஆண்டு ஜூலை 23த் தேதி மாஞ்சோலை தோட்ட தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு நெல்லை சந்திப்பு பகுதியில் நடத்திய போராட்டத்தில் போது 17 பேர் உயிரிழந்தனர். அதனை நினைவு கூறும் விதமாக தாமிரபரணி ஆற்றங்கரையில் ஒரு நினைவு வுத்தூண் அமைக்க வேண்டும். அதற்கு மாவட்ட நிர்வாகம் அனுமதி அளிக்க வேண்டும் என்று அனைத்து கட்சி சார்பில் கடந்த 2012ம் ஆண்டு கோரிக்கை மனு அளித்துள்ளோம்.

இதை வலியுறுத்தி ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 23த்தேதி தொடர்ந்து கோரிக்கை மனு வழங்கி வருகிறோம். ஆனாலும் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

எனவே தற்போது நெல்லை வந்துள்ள முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலினின் எங்களது தொடர் கோரிக்கைகளை பரிசீலனை செய்து பேரணியில் உயிரிழந்த தொழிலாளர்களின் தியாகத்தை போற்றும் விதமாக கலெக்டர் அலுவலகம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள கொக்கிரகுளம் ஆற்று பாலத்திற்கு மாஞ்சோலை தியாகிகள் நினைவு பாலம் என பெயரிட வேண்டும்

இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சிதலைவர் அழகுமீனா, முகிலன்விளையில் அமைக்கப்பட்டு வரும் முதல்வர் மருந்தகத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சிவகாமி உட்பட பலர் உள்ளனர்.

தமிழக மீனவர்கள் அவதி குறித்து

பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும்!

விஜய்வசந்த் எம்.பி. கோரிக்கை!!



நாகர்கோவில் பிப் 07,

தமிழ்நாட்டு மீனவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகள் மற்றும் இன்னல்கள், தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் நிறுவனத்திற்கு வழங்கிய வந்த மத்திய அரசின் நிதி ஒதுக்கப்பட்ட விபரம் மற்றும் சம்பந்த யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு உதவி வழங்கும் இரும்பு குழிந்து பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டுமென கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த் எம்.பி கோரிக்கை வைத்துள்ளார்.

தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனத்திற்கு வழங்கிய வந்த நிதியினை மத்திய அரசு குறைத்த காரணத்தால்ஊரக வளர்ச்சி திட்டங்கள் குறிப்பாக மீனவர் நலன் சார்ந்த திட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இது ஆமை ர க ண க் க ா ன கு டும்பங்களை பாதிப்புக் குள்ளாக்கியுள்ளது. பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டம் மூலம் மீனவர்களுக்கு ஆதாரவு எது வும் கிடைக்காமல்உள்ளது. இன்க காரணமாக நிதி ஒதுக்கீடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படாமல் உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் இறங்கு தளங்கள் செப்பனிடப்படட்டு சீர் செய்யப்படாமல் உள்ளது. மீன்வளத்துறையும், மீனவர் நிராமங்களையும் காக்க காலநிலையைத் தாங்கும் கரையோர மீனவக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு அமைக்கப் பட்ட திட்டம் செயலிழந்து காணப்படுவதொல் மீனவ மக்கள் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

மீனவ கிராமங்களின் பாதுகாப்பு மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பாராளுமன்றத்தில் ஒரு விவாதம் தேவை என ஒத்திவைப்பு தீர்மானம் ஒன்றினை முன் மொழிந்துள்ளேன். என கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் எம்.பி கோரிக்கை வைத்துள்ளார்.

நெல்லை அரசு விழாவில்

75 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!!

நெல்லை, பிப.7–

நெல்லையில் இன்று ரூ.1680 கோடியில் நிட்டப்பணிகளை தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் 75 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 2 நாள் பயணமாக நேற்று சென்னையில் இருந்து விமானத்தில் தூத்துக்குடிக்கு வந்தார். பின்னர் அங்கிருந்து கார் மூலம் நெல்லைக்கு வந்த அவருக்கு கே.டி.சி.நகர் ரவுண்டானாவில் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்ட செயலாளர் டி.பி.எம்.மைதீன்கான், அப்துல் வகாப் எம்.எல்.ஏ. , உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

இதைதொடர்ந்து கங்கைகொண்டான் சிப்காட்டில் ரூ.3800 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள டாடா சோலார் பேனல் தொழிற்சாலையை தொடங்கி வைத்தார். இந்த தொழிற்சாலையில் 4 ஆயிரம் பேர் வரை வேலைவாய்ப்பு பெறுகின்றனர். அதைதொடர்ந்து உணவு பூங்காவை திறந்து வைத்து விக்ரம் சோலார் பேனல் பக்கம் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார். பின்னர் வண்ணார்பேட்டையில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் ஓய்வெடுத்த பின்னர் மாலை 5 மணி அளவில் ரூ.40 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பாளை மார்க்கெட்டவுண்பாரதியார் பள்ளி அருகே ரூ.14.97 கோடியில் நீச்சல் குளத்துடன் கூடிய சிறுவர் விளையாட்டு அரங்கம், ரூ.11.03 கோடியில்நயினார்குளம்தெற்கு பகுதி மேம்படுத்தப்பட்டு சிறுவர் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதை முதல்வர்மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அதன்பின்னர் பாளை தேருஜி அரங்கில் கட்சி முக்கிய பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்தினார். இதைபடுத்து பாளை நூற்றாண்டு மண்டபத்தில் மாற்று கட்சியை சேர்ந்த சுமார் 1000 பேர் திமுகவில் இணையும் விழா முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்றது.

இதைத் முடித்துக்கொண்டு நெல்லை டவுனில்உள்ள இருட்டுக்கடைக்கு திடீர் விசிட் செய்த முதல்வர் அல்வாவை ருசித்து சாப்பிட்டார். நேற்றையை நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்ட முதல்வர் வண்ணார்பேட்டை விருந்தினர் மாளிகையில் இரவு தங்கி ஓய்வெடுத்தார்.

இன்று காலை முதல் நிகழ்ச்சியாக மாஞ்சோலை தோட்டத்தொழிலாளர்களை சந்தித்து அவர்களது குறைகளை கேட்டறிந்தார். அதைபோல் விவசாயிகளுடன் கலந்துரையாடினார். இந்த நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு பாளை அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு புறப்பட்டு சென்றார். இதைபடுத்து வழிநெடுகிலும் சிண்டை மேளம், தாரை தப்பட்டை, கரகாட்டத்துடன் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன்பின்னர் பாளை சமாதானபுரத்தில் இருந்து விழா நடைபெறும்அரசு மருத்துவமனை வரை வழியெங்கும் முதல்வர்நேரடுஷோவில் பங்கேற்று பொதுமக்களுடன் செல்பி எடுத்தும், கை கொடுத்தும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். விழா நிகழ்ச்சி நடைபெறுகிற நிலையில் ரூ.1060.76 கோடி மதிப்பில் நிர்வாகத்துறை சார்பில் உருவாக்கப்பட்டுள்ள தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு இணைப்பு வெள்ள நீர் கால்வாய் இட்டத்தை தொடங்கி வைத்தார். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள ரூ.77.02 கோடி மதிப்பிலான மெகா உணவு பூங்கா, ரூ.19.25 கோடி மதிப்பிலான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மாளூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த 22 ஊரக குடிமிறப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் இட்டம், ரூ. 85.63 கோடி மதிப்பில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பாளை ரெட்டியார்பட்டி திட்டப்பகுதியில் 768 அடுக்குமாடி குடியிருப்புகள் என 24 முடிவுற்ற திட்டப்பணிகள் மற்றும் 1 திட்டம் 20 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து பல்வேறு துறைகளின் சார்பில் 45485 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக உள்ளிட்ட ரூ.167 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி நகர நிலவரித்திட்ட பட்டாக்கள், வீட்டுவசதி வாரிய பட்டாக்கள், 61 ஆயிரத்து 601 நீண்ட காலமாக நிலுவையில் உள்ள 26 ஆயிரத்து 999 பயனாளிகளுக்கான பட்டாக்கள் என மொத்தம் 75 ஆயிரத்து 151 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி முதல்வர்மு.க.ஸ்டாலின் விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் அப்பாவு, நெல்லை கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்ட செயலாளர் டி.பி.எம்.மைதீன்கான், அப்துல் வகாப் எம்.எல்.ஏ. , மேயர் ராமகிருஷ்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் பிரபாகரன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், நெல்லை மாவட்ட பஞ்சாயத்து தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ், பாளை யூனியன் சேர்மன்ஜு, ஒன்றிய செயலாளருமான கே.எஸ்.தங்கபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, கிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் நெல்லை ஏ.ஆர்.ரஹ்மான், கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அருணன், கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் அனுராதா ரவிமுருகன், ஒன்றிய செயலாளர் பி.சி. ராஜன், அம்பை யூனியன் சேர்மன் சிவனுபாண்டியன் என்ற பரணிகேசர், துணைத்தலைவர் ஞானக்கனி, நகர மன்ற தலைவர்கள் களக்காடு சாந்திகபாஸ், வி. கே.புரம் செல்வகேரேஷ் பெருமாள், துணைத்தலைவர்நிலகா, மணிமுத்தாறு பேரூராட்சி தலைவர் அந்தோணியம்மாள், துணைத்தலைவர் பண்டாரம், சிவந்திபுரம் பஞ்சாயத்து தலைவர் ஜெகன், துணைத்தலைவர் பாக்கியலட்சுமி உள்பட ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம், அத்திமரப்பட்டி இந்து நாடார் உறவினர்முறைக்கு பாத்தியப்பட்ட பத்திரகாளி அம்மன் கோவிலில் இன்று 8–ம் ஆண்டு வருஷாபிஷேக விழா நடைபெற்றது.

தோரணமலை முருகன் கோவிலில் கடைசி வெள்ளிக்கிழமையான இன்று வருண கலச பூஜை நடைபெற்றது. இதையொட்டி கிரக குடம் எடுத்து வந்த பக்தர்கள்.

தோரணமலை

முருகன் கோவிலில் வருண கலச பூஜை! இன்று காலை நடைபெற்றது!!

பாவூர்சத்திரம், பிப.7

தோரணமலை முருகன் கோவிலில் வருண கலச பூஜை இன்று (வெள்ளிக்கிழமை) காலை நடைபெற்றது.

தென்காசி கடையம் சாலையில் தோரணமலை குறிமுருகன் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் ஒவ்வொரு தமிழ் மாத கடைசி வெள்ளிக்கிழமையன்றும் மழை வேண்டியும், விவசாயம் தழைக்க வேண்டியும் வருண கலச பூஜைநடைபெறுவதுவழக்கம். இம்மாத பூஜை இன்று (வெள்ளி) நடைபெற்றது.

இதைதொடர்ந்து அதிகாலையில்பக்தர்கள் மலை உச்சியில் உள்ள சுவையில் இருந்து கிரக குடம் எடுத்து வந்தனர். தொடர்ந்து சப்த கன்னியர்கள், விநாயகர் மற்றும் தெய்வங்களுக்கும், மலை அடிவாரத்தில் உற்சவருக்கும் சிறப்பு அபிசேகம், வருண கலச பூஜை நடைபெற்றது.

முன்னதாக மலை உச்சியில் உள்ள பத்திரகாளியம்மன் மற்றும் முருகருக்கும் சிறப்பு அபிசேகம், தீபாராதனைநடைபெற்றது. சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த ஏராளமான கலந்து கொண்டனர். காலை, மதியம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை கோவில் பரம்பரை அறங்காவலர் செண்பகராமன் செய்திருந்தார்.

கல்லூரி மாணவர் வெட்டிக்கொலை!

மர்ம ஆசாமிகளுக்கு வலைவீச்சு!!

மேலூர், பிப.7–

மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள வீர பத்திரன்பட்டியை சேர்ந்த கல்லூரி பேரா சிரியர் ராஜ பாண்டியன்மகன்பாண்டிக் குமரன் (20)தற்போது மேலூரில் வீடுகட்டி குடியிருந்து வருகின்றனர். பாண்டிக் குமரன் மதுரையில் உள்ள கல்லூரி யில் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். நேற்று இரவு 10 மணி யளவில் ஒரு போன் கால் வந்ததையடுத்து வெளியில் சென்று வருவதாக கூறி விட்டு தனது காரில் சென்ற பாண்டிக் குமரன் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதனால் குடும்பத்தினர் அவரை தேடியுள்ளனர். இந்நிலையில் அதுகாகோவில் சாலையில் சூரக்குண்டு விலக்கு அருகே சாலையோரமாக பலத்த வெட்டுக் காயங்களோடு பாண்டிக்குமரன் கொலை செய்யப்பட்டு கிடந்துள்ளார். இதைகண்டு அலறிக்துடித்த பெற்றோர் மேலூர்காவல்நிலையத்தில் புகார் அளித்தனர்.

தகவலையடுத்து அங்கு விரைந்து சென்ற டி.எஸ்பி சிவக்குமார் மற்றும் ஆய்வாளர் சிவசக்தி,சார்பு ஆய்வாளர் இசேஷ், தனிப்பிரிவு தலைமை காவலர் இசேஷ் உள்ளிட்டோர் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மேலூர் அரசு மருத்துவ வாமனைக்கு அனுப்பி வைத்தனர்,

இது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் உத்தரவுப்படி கல்லூரி மாணவர் கொலையில் தொடர் புள்ளவர்களை பிடிக்க டி.எஸ்பி சிவக்குமார் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டையில் போலீசார் இறங்கியுள்ளனர், அவதது செல்போனுக்கு கடைசியாக வந்த அழைப்புகள் மற்றும் அப்பகுதியில் உள்ள சுங்கசாவடி கேமராக்கள் உள்ளிட்ட தடய ங்களை சேகரித்து தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கல்லூரி மாணவர் பாண்டிக்குமரன்படுகொலைசம்பவம் மேலூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

இச்சம்பவம் தொடர்பாக எட்டயபுரம் காவல் துறை யினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர் உடலை மீட்டு எட்டயபுரம் அரசு மருத்துவமனைக்கு உற்கூறு ஆய்விற்காக அனுப்பி வைத்தனர்.

திருமணம் ஆகாத விரக்தியில்

தூக்கிட்டு இளைஞர் தற்கொலை!

எட்டயபுரம் அருகே!!

கோவில்பட்டி, பிப்:07

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகேயுள்ள இளம்பவனம் பகுதியைச் சேர்ந்த செல்வையா என்பவரது மகன் சுந்தர்ராஜ்(29) இவர் பத்தம் பொடி தொழில் செய்து வருகிறார் இவருக்கு திருமணம் ஆகாதால் விரக்தி அடைந்து குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளார். இந்நி லையில் இரவு வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் மின்விசிறியில் சேலையை கட்டி தூக்கு போட்டு இறந்துள்ளார். அதிகாலையில் வீட்டில் உள்ளவர்கள் எழுந்து கதவை தட்டும் பொழுது கதவை திறக்காதால் அதிர்ச்சி அடைந்த அவரது பெற்றோர்கள் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த பொழுதுசுந்தர்ராஜ் தூக்கிட்டு உயிரி முந்தார்.

விக்னேஷ்உடைதைமிழ் நாடு கொண்டு வரக்கோரிய அவரது குடும்பத்தினரின் கோரிக்கையை ஏற்று, முதலமைச்சரின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு அரிஜன் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையாகம் மூலம், ஜமைக்கா நாட்டிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் அவர் பணிபுரிந்த நிறுவனம் மூலமாக தொடர்பு கொள்ளப் பட்டு, உயிரிழந்த விக்னேஷ் உடலை தமிழ்நாடு கொண்டு வர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

விக்னேஷ் உடல் 30.12.2024 அன்று பிணக் கூராய்வு செய்யப்பட்டு பிணவறையில், அவருக்கான இழப்பீட்டை அவர் வேலை செய்த நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து வழங்க தமிழக அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மேலும், அன்னாரது உடலை தமிழ் நாடு கொண்டுவருவதற்கான ஏரலவினத்தை தமிழக அரசே ஏற்கும்.

விக்னேஷ் வேலை செய்த நிறுவனத்துடன், தொடர்பு ஏற்படுத்தப் பட்டு, நிறைவை தொடர்ந்து அயலகத்தமிழர்நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் மூலம் ஜமைக்கா நாட்டிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் அவர் பணிபுரிந்த நிறுவனம் தொடர்பு கொள்ளப் பட்டு, உயிரிழந்த விக்னேஷ் உடலை தமிழ்நாடு கொண்டு வர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், உடல் தமிழ் நாடு கொண்டு வரப்படும் நிலையில் விமான நிலையத்திலிருந்து, அவரது இல்லம் வரை அரசின் கட்டணமில்லா அமரர்ஊர்தி மூலம் கொண்டு செல்லப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

2024–25–ம் ஆண்டுக்கான

அகில இந்திய அரசு ஊழியர்களுக்கான விளையாட்டு தேர்வு போட்டிகள்!

சென்னையில் நடக்கிறது!!

நெல்லை, பிப.7–

2024 – 2025ம் ஆண்டுக்கான அகில இந்திய அரசுஊழியர்களுக்கான வாலிபால் விளையாட்டுப் போட்டிகள் கள் 14–ந்தேதி முதல் 18–ந்தேதி வரை (ஆண் / பெண்) சென்னையில் நடைபெறுவதை முன் னிட்டு மாநில அளவிலான தேர்வு போட்டிகள் 10 ந்தேதி காலை 8 மணிக்கு ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம் சென்னையில் அஜராக வேண்டும். மாநில அளவிலான அரசு ஊழியர்களுக்கான தேர்வு போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர், வீராங்கனைகளுக்கு பயணப்படி மற்றும் தினப்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் எவ நெல்லை மாவட்டவிளையாட்டு மற்றும் இளைஞர்நல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

NAME CHANGE

I, J.Yasoda Spouse of EX-ARMY JC 191233F Subedar Jayaraj.R resident of No. 4. Nethaji Street Extension, STC College Road, Perumalpuram, Tirunelveli-627007 Tamilnadu as Changed my name from J.Yasoda to Yasotha Lingammal R Vide Affidavit dated 5.02.25 and my correct date of birth is 21.05.1959.

J.YASAODA LINGAMMAL

Published and Printed by R.Aathi Narayanan on behalf of M/s.Nellai Murasu Pvt Ltd., from Nellai Malai Murasu Achagam, No.9/2, Thiruvananthapuram Road, Vannarpettai, Tirunnelveli–627 003. Editor: R.Aathi Narayanan

நெல்லை காவேரி மருத்துவமனையில்

90 சதவீத தீக்காயம் ஏற்பட்ட நோயாளிக்கு வெற்றிகரமாக சிகிச்சை!

நெல்லை, பிப.7–

விபத்தினால் 90 தீக்காயம் ஏற்பட்ட நோயாளி, நெல்லை காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வெற்றிகரமாக குணமடைந்தார்.

தீக்காயவடுக்கள், சுருக்கங்கள் ஏதும் இல்லாமல் முற்றிலுமாக குணமடைந்து வழக்கமான வாழ்க்கை முறைக்கு திரும்பினார். தனியார்நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த 50 வயது மதிக்கத்தக்க தொழிலாளிக்கு, பணியிடத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் அவரது முகம், கழுத்து, உடலின் முன் மற்றும் பின்பகுதி மற்றும் கால் பகுதியில் 90 சதவீதம் தீக்காயம் ஏற்பட்டு, வேறு தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்தார்.

மூன்று நாட்கள் சிகிச்சைக்குப் பிறகும், நோயாளியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படாமல் மோசமானதைத் தொடர்ந்து அவர் திருநெல்வேலி காவேரி மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு பிளாஸ்டிக் சர்ஜரி அறுவை சிகிச்சை மருத்துவர் திபுனர் மருத்துவர் பாலாஜி சர்மா தலைமையிலான குழு, சிகிச்சையை துரிதமாக மேற்கொண்டது. தீக்காயத்தின்தன்மை அதிகமாகஇருந்தால் நவீன முறையில் தீக்காயத்தினால் ஏற்பட்ட தீக்காயங்களின் அறுவை சிகிச்சை செயல்முறைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. நோய் தொற்று ஏற்படாமல் இருக்க நோயாளி ஒரு தனிவார்டில் வைத்து கவனிக்கப்பட்டார். தீக்காயங்களின் சிகிச்சைக்கான வழிமுறைகளின்படி அவருக்கு சீரியமுறையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டது. அடுத்த சில நாட்களில் அவரது உடல்நிலையில் சீரான முன்னேற்றம் காக்கூடிய நிலையில் அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்.

இதுகுறித்து காவேரி மருத்துவமனையின் பிளாஸ்டிக்சர்ஜன்டாக்டர் பாலாஜிசர்மா அவர்கள் கூறியதாவது, "இந்த சிக்கலான நிலைமையை பொறுமையாக, இறைவியுடன் கையாண்டு மிகுந்த கவனிப்புடன் சிகிச்சை வழங்கிய பொது மருத்துவர், தீவிர சிகிச்சை மருத்துவர்கள், மயக்கவியல் நிபுணர்கள், செவிலியர்கள், பிஸியோதெராபிஸ்ட், பயிற்சியாளர், மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி மற்றும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

நோயாளியில்உடல்நலம்நன்குமன்றேறியது மட்டுமல்லாமல், எந்தவித தகுதியாடுகளோஇல்லாமல்அவர்நன்கு குணமடைந்து இயல்பு வாழ்க்கைக்குதிரும்பியுள்ளதாலும் கவும்மகிழ்ச்சிஅளிப்பதாக தெரிவித்தார்.

முன்னாள் பிரதிநிதிகள்

உள்ளாட்சி தனி அலுவலர்களை மிரட்டுவதை வேடிக்கை பார்ப்பதா?

ஓ.பன்னீர் செல்வம் கண்டனம்!

சென்னை, பிப.7

முன்னாள் பிரதிநிதிகள் உள்ளாட்சி தனி அலுவலர்களை மிரட்டுவதை வேடிக்கைப் பார்ப்பதா என்று தமிழக அரசுக்கு ஓ. பன்னீர் செல்வம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது:–

கடந்த 44 மாத கால இ.மு.க. ஆட்சியில், அரசு ஊழியர்கள், காவல் துறை அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்த அதிகாரிகள் என அனைவரையும் மிரட்டி அரசுப் பணிகளில் தலையிடுவதை இ.மு.க.வினர் வாடிக்கையாக கொண்டிருந்தனர். இதற்கு பல உதாரணங்களைக் கூறலாம். இந்த வகையில், தற்போது உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்களின் பதவிக் காலம் முடிந்தும் அரசுப் பணிகளில் அவர்களின் தலையீடு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில், 28மாவட்டங்களில்உள்ளஉள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் பதவிக் காலம் கடந்த ஜனவரி மாதம் முடிவடைந்தவடுத்து, அந்த உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தினைக் கவனிக்க தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இதனையடுத்து, மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி அலுவலகங்கள் தனி அலுவலர்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும், பதவிக் காலம் முடிந்த உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் தலையீடு அதிகரித்து வருகிறது.

உள்ளாட்சி அமைப்புக்களில் அடிப்படைப் பணிகளுக்கான ஒப்புக்தரார் தேர்வு, புதியமனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவது, கட்டுமானப் பணிகளுக்குஅனுமதிவழங்குவது என அனைத்திலும் பதவிக் காலம் முடிந்த உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் தலையிடுவதாகவும், தங்களைக் கேட்காமல் எந்தப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என்று அதிகாரிகளுக்கு வாய்மொழி உத்தரவு பேரடுவதாகவும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இதன் விளைவாக, தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் விநியோகம், சாலைப் பணிகள் போன்றவை கடுமையாக பாதிக்கப்படுகின்றன. இது குறித்த உயர் அதிகாரிகளுக்கு புகார்கள் அளிக்கப் பட்டும், எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

முதலமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, பதவிக் காலம் முடிந்த உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளில் தலையிடுவதை தடுத்து நிறுத்தி, தனி அலுவலர்கள் சுதந்திரமாக செயல்படவழிவகை செய்து, மக்கள் நலப் பணிகள் தொடர்ந்து நடைபெற ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பாளை.மார்க்கெட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மகாத்மா காந்தி பொது வணிக சந்தையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அருகில் அமைச்சர் கே.என்.நேரு, முன்னாள் எம்.பி.சுப்பராயன், பகுதி செயலாளர் எம்.பி.ஆ.ஜெகதீஷ், மேயர் ராமகிருஷ்ணன், , கலெக்டர் கார்த்திகேயன், கமிஷனர் சுகபுத்ரா, உள்பட பலர் உள்ளனர்.

ஜமைக்கா நாட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட

தமிழக வாலிபர் உடலை மீட்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது!

தமிழக அரசு அறிவிப்பு!!

சென்னை, பிப.7

ஜமைக்கா நாட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக வாலிபர் உடலை மீட்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது பற்றிய விவரம் வருமாறு:–

ஜமைக்கா நாட்டில் டாக்ஸ் மற்றும் கைகோல் தீவுகளில் உள்ள ஜெ.கே.புட் மார்ட் கம்பெனி யில் பணிபுரிந்த தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விக்னேஷ் என்பவர், 18.12.2024 அன்று அங்கு நடந்த கொள்ளை முயற்சியில், கொள்ளையர்களால் சுடப்பட்டு உயிரி முந்தார்.

விக்னேஷ்உடைதைமிழ் நாடு கொண்டு வரக்கோரிய அவரது குடும்பத்தினரின் கோரிக்கையை ஏற்று, முதலமைச்சரின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு அரிஜன் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையாகம் மூலம், ஜமைக்கா நாட்டிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் அவர் பணிபுரிந்த நிறுவனம் தொடர்பு கொள்ளப் பட்டு, உயிரிழந்த விக்னேஷ் உடலை தமிழ்நாடு கொண்டு வர தேவையான நடவடிக்கைகள் எடுக்